ஜூன் 2023

# நற்றமிழ்க்குடில்

## தமிழால் தழைக்கும் உலகு

## மாணவ இலக்கிய மின்னிதழ்



குடில் 5

விருந்து 17

**தமிழ்த்துறை**

**சோகா தமிழ்ப் பேரவை வெளியீடு**

**சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி**

சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம், சென்னை 600 099.

# நற்றமிழ்க்குடில்

தமிழால் தழைக்கும் உலகு

**மாணவ இலக்கிய மின்னிதழ்**

குடில் 5

விருந்து 17

ஜூன் 2023

## தமிழ்த்துறை

**சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு**

**சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி**

**சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம், சென்னை 600 099.**

# நற்றமிழ்க்குடில்

ஆசிரியர் குழு : மோ. ஐஸ்வரியா, முதுகலைத்தமிழ், முதலாமாண்டு
லோகேஸ்வரி, முதுகலைத்தமிழ், முதலாமாண்டு
வி. மாரிகவிதா, இளங்கலைத்தமிழ், இரண்டாமாண்டு
து. லீலாவதி, இளங்கலைத்தமிழ், இரண்டாமாண்டு

ஆலோசனைக் குழு : டாக்டர் சேது குமணன், கல்லூரித் தலைவர்
முனைவர் மீரா முருகேசன், கல்லூரி முதல்வர்
முனைவர் கண்மணி சுப்பிரமணியன், கல்லூரித் துணை முதல்வர்
முனைவர் தே. இராணி எலிசபெத், தமிழ்த்துறைத் தலைவர்
தமிழ்த்துறைப் பேராசிரியர்கள்

வெளியீடு : தமிழ்த்துறை
சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு
சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி
சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம், சென்னை 600 099.

*Blog* : *sokatamil blogspot.com*
*Facebook* : *Soka Tamil Avai*
*Youtube* : *Sokatamilavai*
*E.mail* : *sokatamilavai2023@gmail.com*

# நற்றமிழ்க்குடில்

## தமிழால் தழைக்கும் உலகு

### மாணவ இலக்கிய மின்னிதழ்

### குடில் 5

### விருந்து 17

## ஜூன் 2023

## அனைவருக்கும் வணக்கம்

சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியின் தமிழ்த்துறை இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டப்படிப்புகளுடன் செயல்பட்டு வருகிறது. மாணவியரை ஆய்வு நிலைக்கு உயர்த்த வேண்டும் என்ற நோக்கில் “அகழ்” என்னும் பெயரில் ஆய்வரங்கங்கள் தொடர்ந்து துறையில் நடத்தப்பெறுகின்றன. தமிழ்த்துறை மாணவியருக்கு ஆய்வுக் கட்டுரைகள் எழுதுவதற்குத் துறைப் பேராசிரியர்களால் பயிற்சியளிக்கப்பட்டு, மாணவியர் ஆய்வுக் கட்டுரைகளை எழுதுகின்றனர்.

ஆய்வுக்கட்டுரைகளை மாணவியர், ஒவ்வொரு பருவத்திலும் நடத்தப்பெறும் ஆய்வரங்கங்களில் வாசித்தளிக்கின்றனர். இவ்வாய்வரங்குகளுக்கு, தமிழ்த்துறையில் படித்து, கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர்கள், பள்ளிகளில் ஆசிரியர்கள் மற்றும் ஆய்வுப் படிப்பு மேற்கொள்ளும் மாணவியரைச் சிறப்பு விருந்தினர்களாக அழைத்து, ஆய்வரங்கத் தலைவர்களாக அமர்த்துகின்றோம்.

வாசித்தளிக்கப்படும் கட்டுரைகளைத் தொகுத்து நூலாக வெளியிடுகின்றோம். அவ்வகையில் இந்த இதழ் அகழ் ஆய்வரங்கச் சிறப்பிதழாகச் சில கட்டுரைகளின் தொகுப்பாக வெளிவருகிறது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

**தமிழ்த்துறைத் தலைவர்**

**மற்றும்**

**உதவிப் பேராசிரியர்கள்**

### ஆய்வுக் கட்டுரை - ஒன்று

# ஆசிரியர் மாணவர் உறவுப்பாலம்
# கமலா டீச்சர் சிறுகதையை முன்வைத்து

**மோ. ஐஸ்வர்யா**

**இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு**

**முன்னுரை**

தமிழ் எழுத்தாளர் பிரபஞ்சனின் கமலா டீச்சர் சிறுகதையை முன்வைத்து இக்கட்டுரை அமைந்துள்ளது. இச்சிறுகதையில் பிரபஞ்சன், ஆசிரியர் மாணவருக்கு இடையேயான அன்பையும் 'குரு'வின் தன்மையையும் அழகான காட்சிகளுடன் மனதைக் கொள்ளை அடிக்கிறார். இவரின் சிறுகதை நம்மைப் படிக்கத் தூண்டும் வகையில் அமைந்துள்ளது. 'கமலா டீச்சர்' என்னும் கதை இயல்பான வாழ்க்கை முறைகளை எடுத்துக்காட்டுகிறது. இச்சிறுகதையைப் படிக்கும் போது, மனதில் வாழ்வில் முன்னேற்றம் அடையவேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்துகிறது. 'கமலா டீச்சர்' மாணவர்களுக்கு நிலையான செல்வம், கல்வி என்பதை உணர்த்துகிறது.

**கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு**
**மாடல்ல மற்றை யவை** (குறள் – 400)

எனும் வள்ளுவனின் வாக்கிற்கு ஏற்ப அழிவில்லாத சிறந்த செல்வம், கல்விச் செல்வமே மற்றைய பொன், பொருள், மண் இன்னும் பிற செல்வங்கள் ஒருவனுக்குச் சிறந்த செல்வமாகது. எடுக்க எடுக்க குறைவது செல்வம், கொடுத்தால் வளர்வது கல்வி என்ற பொன்

மொழியை உணர்ந்து ஆசிரியப் பணியை மேற்கொள்ளும் கமலா டீச்சரின் நற்பணியைக் கட்டுரையில் ஆய்வோம்.

**கமலா டீச்சர் குடும்பம்**

அப்பா, அம்மா, அண்ணன், அண்ணி, தங்கை லீலாவதி என டீச்சர் பெரிய குடும்பத்தை உடையவர். கமலாவின் அண்ணன் புதுதில்லியில் உத்தியோகத்தில் இருந்தார். அப்பா அம்மாவைப் பராமரிக்கும் பொறுப்பு டீச்சரைச் சேர்ந்துவிட்டது. அப்பா சாய்வு நாற்காலியில் உரித்த கோழி மாதிரி ஒடுங்கிப்போய் இருந்தார். அவர் கையில் ஓர் ஆங்கிலப் பத்திரிக்கை இருந்தது. காலை மாலை எந்த நேரத்திலும் அவர் அதை வாசித்தபடி இருப்பார். அப்பாவைப் போலவே தான் அம்மாவும். அம்மா மதியங்களில் வாசல் மடியில் தலைவைத்துப் படுத்துவிடுவாள். காலை மாலைகளில் வாசலில் காலை தொங்கவிட்டுக் கொண்டு அமர்ந்திருப்பார். மேக ஓட்டத்தில் ஏதோ ஒன்றைத் தேடுவது போல இருக்கும் அவருடைய பார்வை. என்ன தேடினார்? என்பது எவருக்கும் புரியாத புதிர்தான். அம்மாவுக்குச் சித்தப்பிரமை என்பதால், வீட்டு வேலைகளை, கமலா டீச்சர் பார்ப்பாள். கமலா, கணித ஆசிரியர். பள்ளியில் கணிதத்தோடு பிற பாடங்களையும் கற்பிக்கிறார். குடும்பம், பள்ளி, மாணவர் என்று கமலா டீச்சர் வாழ்க்கைத் தொடர்கிறது.

**கமலா டீச்சரின் தோற்றமும் குணநலமும்**

கண்ணாடிக்குள் மைதீட்டியக் கண்கள். எப்போதுமே குடையைப் பிடித்துக்கொண்டு நடை. வெயிலோ, மழையோ இரண்டுமற்ற மாலை பொழுது எப்பொழுதானாலும் குடை இருக்கும். கண்ணனின் கவசக்குண்டலம் போல் அவளை விட்டு பிரியாது. விடுமுறை தினங்களான சனியும் ஞாயிறும் டீச்சருக்குக் கொள்ளை வேலை வந்து விடும். டீக்கடைக்காரர் முதல் ரேஷனுக்கு விண்ணப்பித்தவர்கள் வரை கடிதம் எழுதுவதற்கு டீச்சரிடம் வருவார்கள். அவளிடம் படித்த பையன்கள், பெண்களின் வேலைவாய்ப்பு மற்றும் விவாக விசயத்தில் மிகவும் கவனமெடுத்து தன்னாலானதைச் செய்துக்கொண்டே இருப்பாள், தன்னலமற்ற கமலா டீச்சர்.

**மாணவனின் மனநிலையைப் புரிந்து செயல்படல்**

வைத்தியநாதனிடம் கமலா டீச்சர் கேட்ட முதல் கேள்வி. என்ன மார்க்? குறைவான மார்க்குதான். பரவாயில்லை இங்கே நான் பார்த்துக் கொள்கிறேன். படித்துவிடலாம் இதுவே ஆசிரியரின் பதிலாக இருந்தது. அந்த வார்த்தையில் கமலா டீச்சர் வைத்தியநாதன் மனசுக்குள் இடம்பிடித்துவிட்டார். இதற்கு முன் வைத்தியநாதன் பெரிய மதிப்பெண்கள் எடுத்ததில்லை இதே குறைவான மதிப்பெண்கள் தான். அப்போது மற்ற ஆசிரியர்களிடமிருந்து வைத்தியநாதன் கேட்ட வார்த்தைகள்,

“இந்த மார்க் சொல்ல உனக்கு வெட்கமாயில்லை மண்டையில் இருப்பது மூளையா? களிமண்ணா?” என்பது தான்.

டீச்சர் அவனை விட்டுக்கொடுக்காமல் பேசியது தெம்பைத் தந்தது, அந்த நிமிசமே மாணவனுக்குப் பள்ளிக்கூடம் பிடித்துவிட்டது. ஆசிரியரினால் பள்ளியும் படிப்பும் பிடித்தது. ஓர் ஆசிரியர் மாணவர்களை ஊக்கப்படுத்தி உயர்த்த வேண்டுமே தவிர மட்டம் தட்டக் கூடாது. மாணவர்களின் மனநிலைக்கு ஏற்ப வழிநடத்த வேண்டும் என்னும் மாணவனின் உளவியலைக் கதையாசிரியர் எடுத்துரைக்கிறார்.

**மாணவர்களுடன் சேர்ந்து பயணிக்கும் கமலா டீச்சர்**

அரசமர இலைகளைப் புத்தகத்தில் வைத்து, பாதுகாக்கும் பழக்கம் வைத்தியநாதனுக்கு இருந்தது. டீச்சர் ஒரு நாள் அரச இலையைப் பார்த்து விட்டு, சிரித்தார். எதுக்கு இந்த இலை என்று கேட்டார். வைத்தியநாதன் மௌனமாகச் சிரித்தான். மயிலிறகு தரேன் வச்சுக்கோ குட்டி போடும்ன்னு சொன்னார். அதற்கு வைத்தியநாதன் ஆறு மாதத்திற்கு ஒரு குட்டி போடும் என்றான். “ஓ” என்றார். அவர் புருவங்களை உயர்த்திக்கொண்டே இந்தச் சின்ன விசயம்கூட டீச்சருக்குத் தெரியவில்லையே. அதை நான் சொல்லும்படி ஆயிற்று என்று அவனுக்குச் சந்தோசம். மாணவனது மனநிலையோடு சேர்ந்து நல்ல பழக்க வழக்கத்தைக் கற்பித்து ஊக்குவித்துச் சிறந்த பாதையில் கமலா டீச்சர் நடத்தி வந்தார். வைத்திய நாதனை மட்டுமல்ல அவரது வாழ்நாளில் சந்தித்த மாணவர்களையும் இவ்வாறே வழிநடத்தினார்.

இன்றைக்கும் மழலையர் பள்ளியில் ஆசிரியர்கள் பாடம் கற்பிக்கும் முறையைப் பார்க்கும் போது தாங்களும் குழந்தைகளாவே மாறி அவர்களுடன் விளையாடி குழந்தைகளுக்குப் பிடித்தமான முறையில் சைகைகளுடன் பாடல்களைக் கற்பித்து மகிழச் செய்கின்றனர். ஒவ்வொரு காலக்கட்டத்திலும் குழந்தைகளின் மன நிலை வெவ்வேறாக இருக்கும். மாணவனின் மனநிலையைப் புரிந்து கொண்டு, அவனோடு சேர்ந்து பயணிப்பது அவசியம், அது சவாலான என்பதை அறியமுடிகிறது.

**ஆசிரியர் மாணவனைக் கையாளும் முறை**

வைத்தியநாதன் மதிப்பெண் குறைவாக எடுக்கும் படிக்காத மாணவனாக இருந்தாலும் ஆசிரியரால் அவன் ஆளுமைத்திறனைப் பெற்றான். ஆசிரியர் மாணவனின் திறனை அறிந்து, ஊக்குவித்தால், அடுத்த கட்டத்துக்குப் போக முடிகிறது. இப்போது வைத்தியநாதன் வெளியூருக்குச் சென்று படித்து முடித்து நல்ல வேலையில் இருக்கிறான். இத்தகைய செய்தியைக் கேட்பது ஓர் ஆசிரியருக்கு மனமகிழ்ச்சியைத் தருவதாக இருக்கும்.

**கமலா டீச்சரின் தியாகம்**

கமலா டீச்சரைப் பெண் பார்க்க அனைவரும் வீட்டிற்கு வந்திருந்தனர். டீச்சர் பள்ளி நேரம் முடிந்த பிறகே வீட்டிற்கு வந்தார். இன்றைக்கு ஒரு நாளாவது விடுப்பு எடுக்கக் கூடாதா என்ற உறவினர்களின் பேச்சு தொடர்ந்து கொண்டே இருந்தது. அவரது அப்பா "அவளுக்கு படிப்பும் பள்ளிக்கூடமும் முக்கியம்" அவள் ஒரு டீச்சர் என்று கூறினார். இதைக் கேட்டவுடன் மாப்பிள்ளை வீட்டார் பெண் வேலைக்குப் போவது எங்கள் வீட்டில் வழக்கம் இல்லை திருமணத்திற்குப் பிறகு வீட்டில் இருந்தால் போதும் என்று கூறினர். ஆசிரியர் பணியை விரும்பி மாணவர்களுக்காகப் பணியாற்றும் கமலா டீச்சரால் இதை ஏற்றுக் கொள்ள முடிவில்லை. அவர் தன் திருமணத்தை நிறுத்தினர். தன் பணிக்காகக் கமலா டீச்சர் செய்த முதல் தியாகம் இது.

காலை இரண்டாவது பீரியடு நடக்கும் பொழுது அந்தச் செய்தி வந்தது. “டீச்சரின் அம்மா காலமாகிவிட்டார்”. வாசலில் காலை தொங்கப் போட்டுக் கொண்டு ஓடும் மேகங்களைப் பார்த்த படியே அவர் காலமானார். டீச்சர் வீட்டிற்குப் போனால், அம்மாவை வாசலில் கிடத்தி இருந்தாங்க. அப்பா அம்மாவின் தலையைப் பிடித்துக் கொண்டிருந்தார். டீச்சர் அழுது புலம்பவில்லை. அவள் கண்கள் சிவந்து இருந்தன. தன் ஆசிரியர் பணிக்காகக் கமலா டீச்சர் செய்த இரண்டாவது தியாகம் இது. இத்தனைப் பெரிய இழப்பையும் மீறி இரண்டாம் நாளே டீச்சர் பள்ளிக்கூடத்திற்கு வந்து விட்டார்.

வைத்தியனாதன் பள்ளி முடிந்து கிளம்பும் போது, ஆசிரியரிடம் அம்மா நோவா இருந்தாங்களா டீச்சர்? என்று கேட்க “நோவு மனசுல தான்” என டீச்சர் பதில் அளித்தார். இந்த ஒரு வார்த்தையில் இருந்து அவரது சூழல் மொத்தமும் தெளிவாகிறது.

இவ்வளவு போராட்டத்திற்குப் பின்னர் கமலா டீச்சர் ஆசிரியர் பணியை எந்தக் குறையும் இல்லாமல் செய்து கொண்டிருந்தார். மாணவ, மாணவிகளுக்குச் சாயங்கால வேலையில் வீட்டில் இலவசமாக டியூசன் எடுப்பார். அதற்கு பெற்றோர் பணம் கொடுக்க முன்வந்தாலும் வாங்கிக்கொள்ள மாட்டார். காரணம் அவர் தான் செய்யும் பணியின் மீதுக் கொண்ட பற்று.

வைத்தியநாதன் ஆண்டுகள் கழித்து டீச்சரைக் காண போனால், அங்கு டீச்சர் இருந்த வீடு மாணவிகள் தங்கும் விடுதியாக மாறி இருந்தது. வீட்டின் மாடியில் டீச்சர் வாடகைக்குக் குடியிருந்தார். டீச்சர் கல்யாணம் செய்து கொள்ளவில்லை. தனிமை உங்களுக்குக் கஷ்டமாக இல்லையா டீச்சர்? என்று கேட்டான். இல்லை, நான் ஒரு டீச்சர் அதில் தான் எனக்கு சந்தோஷம் திருப்தி எல்லாம். இன்னும் ஒரு தடவை தொடக்கத்தில் இருந்து வாழ சொன்னாலும் நான் டீச்சராகத் தான் வாழ்வேன் என்றார்.

இவற்றை எல்லாம் படிக்கும் போது ஒவ்வொரு ஆசிரியரும் தங்கள் குடும்பத்தில் என்ன சூழ்நிலையாக இருந்தாலும் மாணவர்களிடம் நடந்துக் கொள்ளும் விதத்தை எண்ணி எனக்கு எழுத்தறிவித்த ஒவ்வொரு ஆசிரியரையும் கண்டு வியப்படைகிறேன் பெரிதும் மதிக்கிறேன்.

**முடிவுரை**

பிரபஞ்சனின் கமலா டீச்சர் கதை ஆசிரியப் பணியின் மகத்துவத்தை நமக்கு வெளிப்படுத்துகிறது. ஓர் ஆசிரியர் எப்படி இருக்க வேண்டும்? பல இலக்கண முறைகள் இருந்தாலும் அவற்றைப் பாடமாகப் படித்து விட்டுவிடுகிறோம். இந்தக் கதை வருங்கால ஆசிரியராக மாற இருக்கும் நமக்கு சிறந்த இலக்கணமாக அமையும். கதையில் இடம் பெறும் கமலா டீச்சரைப் போல் தியாகம் ஏதும் செய்ய வேண்டாம். நற்கல்வியை நல்லொழுக்கத்தை மாணவர்களிடம் விதைக்கும் சிறந்த ஆசிரியர்களாக இருப்போம்.

இக்கதையின் மூலம் ஆசிரியர் மீதான மதிப்பும், எதிர்கால ஆசிரியர்களான நாம் எப்படி இருக்க வேண்டும் என்ற வழிமுறையும் வெளிப்படும்படி ஆசிரியர் கதையை அமைத்துள்ளார்.

## ஆய்வுக் கட்டுரை – இரண்டு

# சுமைதாங்கியின் அழுகுரல்

**தே. துளசி**

**இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு**

**முன்னுரை**

எழுத்தாளர் ஜெயகாந்தன் சிறுகதை, புதினம், கட்டுரை, திரைப்படம் என அனைத்துத் துறையிலும் பரந்துப்பட்ட ஆற்றல் உடையவர். இவர் எழுத்தாளர், பத்திரிக்கையாளர், திரைப்படத் தயாரிப்பாளர் மற்றும் விமர்சகர் எனப் பன்முகத் தன்மைக் கொண்டவர். இவர் எழுதிய சுமைதாங்கி சிறுகதை 1962ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது.

பெண் என்பவள் தாய்மை அடைந்தால் மட்டுமே அவள் முழுமை அடைகிறாள். தாயின் முக்கியத்துவத்தை அனைவராலும் உணரமுடியும். ஒரு பெண் தாய்மை அடைந்த உடன் அவள் அடையும் மகிழ்ச்சி அளவுக்கு அதிகமானது. தாய்மை உணர்வை ஜெயகாந்தன் அழகாகச் சிறுகதையில் கூறியுள்ளார். சுமைதாங்கி சிறுகதையில் வாயிலாக அறியலாகும் தாய்மையைப் பற்றி விளக்கமாகக் இக்கட்டுரையில் காண்போம்.

**கதையின் மையக்கருத்து**

பிள்ளையைப் பறி கொடுத்தவளின் தாய்மை உணர்வு, தன் பிள்ளைக்கு விபத்து நேர்ந்ததோ எனத் தவித்தவளின் தாய்மை உணர்வு, பிள்ளை இல்லாமல் குழந்தைச் செல்வத்திற்காக ஏங்கும் தாயின் தாய்மை உணர்வுகளின் வெளிப்பாடே இக்கதையின் மையக்கரு.

**கதை மாந்தர்கள்**

**காவலர்**

**தாய் - காவலரின் மனைவி**

**மற்றொரு தாய் - காலனித் தெருவில் இருப்பவள்**

**கதைச்சுருக்கம்**

ஒரு தாய் வெளிப்படுத்தும் அன்பை இருவேறு கோணங்களில் கதை ஆசிரியர் கூறியுள்ளார். இந்தக் கதை ஒரு காலனியில் இருந்து உருவாகிறது. ஒரு போலீஸ்காரர் ஒவ்வொரு வீடாகப் போய் ஏனம்மா. உங்க வீட்ல ஒரு பத்து வயசு குழந்தை இருக்கா ஆம்பள குழந்தை காக்கி நிசாரும், வெள்ளை சட்டையும் போட்டு இருப்பானா என்று ஒரு பரபரப்போடு அனைவரிடமும் கேட்டுக்கொண்டிருந்தார்.

அவரைக் காலனின் தூதுவன் என்று ஜெயகாந்தன் குறிப்பிடுகிறார். ஏனென்றால் அவர் காலனிடமிருந்து ஓர் அவச்செய்தியைக் கொண்டு வந்து இருக்கின்றான். வீட்டின் அருகில் துணியைக் காய வைத்திருந்த ஓர் அம்மாவிடம் காவலர், அங்க ஓவர் ப்ரிட்ஜ் லாரியில் சிக்கி ஒரு பையன்..... அப்புறம் சொல்ல முடியாமல் திணறுகின்றார். ஐயோ புள்ள உயிருக்குப் பெரும் மூச்சு விட்டு அங்கிருந்து போயிட்டாரு.

அப்புறம் பக்கத்து வீட்ல போய் ஏன்மா உங்க வீட்ல ஏதாவது குழந்தை இருக்கா? என்று கேட்கும்போது எனக்கு குழந்தையே இல்லை என்றால், குழந்தை இல்லாதவர்களைப் பார்த்து போன ஜென்மத்தில் என்ன பாவம் செய்தானோ? குழந்தைச் செல்வம் இல்லை என்றே அனைவரும் சொல்வார்கள். இந்தப் போலீஸ்காரர் அம்மா புண்ணியவதி என்று கூறிவிட்டு நகர்ந்தார். காரணம் தாயினால் ஏற்றுக் கொள்ள முடியாத அத்தனைக் கொடூரம் நிகழ்ந்துள்ளது.

“ஒரு புள்ளையைப் பெத்து வளர்த்து இன்னக்கி ரோட்ல இரத்தமும், சதையுமாகப் பெற்றவனைப் பறிக்கொடுத்து இருக்காளே, அந்தப் பாவிய தேடி நான் போறேன்” என்று

கூறியவாறே ஒவ்வொரு வீட்டுக்கும் போய் ஒவ்வொரு பெண்ணைப் பார்க்கும்போதும் இவ அவளா இருக்கக்கூடாது என்று சொல்லி மன பயந்துடனே சென்றார். எப்படியோ ஏதோ ஒரு வீட்ல ஏதோ ஒரு தாய்க்கு இந்தச் செய்தி டைம் பாம் போல வெடிக்க போகுது அவள் அழுகிறாள் நான் போகிறேன் என நினைத்துக் கொண்டு நடந்து போகும்போது உடல் வேர்த்து ஒரு வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்தார் பேசாமல் திரும்பி போயிடலாமா...

திரும்பிப் போயிட்டா அந்தத் தாய்க்கு எப்படி தெரியும் அது ஒரு தாயில்லாக் குழந்தையா இருக்கக்கூடாது. அந்த எமன் தான் இதுக்கு காரணம் அந்த எமன் இவ்வளவு அக்கிரமம் பண்றானே. கடவுளே, பத்து மாசம் சுமந்து பெத்திருந்தால் தான் தெரியும். இந்த இடத்தில அவருக்கும் கடவுளுக்கும் ஒரு விவாதமே நடக்குது. இப்படி எல்லாம் சொல்லிட்டு அவரு அந்த வீட்டைவிட்டு போறாரு.

மற்றொரு வீட்டில் ஒரு பெண் குழந்தைக்குப் பால் கொடுத்திட்டு இருக்கா. ஏம்மா ஒரு டம்ளர் தண்ணி கொடு அப்படின்னு கேட்கிறார் அந்தப் பெண்ணு குழந்தைய அனைத்தவாரு எழுந்து தண்ணீர் கொடுக்கிறார். காவலர் யோசிக்கிறார். இல்ல இவ அந்தத் தாயா இருக்காது. இவச் சின்னப் பெண்ணா இருக்காளே. சரி கேட்டு பார்க்கலாம் ஏம்மா இதுதான் தலைச்சன் பிள்ளையா எனக் கேட்கிறார். இல்ல பெரியவன் இருக்காரா. அதுக்கப்புறமும் 2 பொறந்துச்சு செத்துப்போச்சு. இது நாலாம் பேரு இப்ப பெரிய பையன் பள்ளிக்கூடம் போய் இருக்கான். உடனே அவருக்குப் பரபரப்பு உண்டாயிற்று. என்ன சட்டை போட்டிருந்தான் பள்ளிக்கூடத்தில் காக்கி நிசாரும் வெள்ளைச் சட்டையும் வெள்ளை போடனும்னு சொல்லி இருக்காங்க. நேத்து புதுசா துணிய தச்சிக் குடுத்ததுக்கு அப்புறம் தான் பள்ளிக்கூடமே போவேன்னான்.

பள்ளிக்கூடம் ஓவர் பிரிட்ஜி கிட்டயானு கேக்குராரு. இல்ல ஆனா அது ஊரெல்லாம் சுத்தும் சொல்றதே கேட்கிறதில்லை, பயங்கரவாலு. ஐஸ்க்ரீம் வாங்க அறையணா குடுனு கேட்டான் தரமாட்டேன்னு சொன்னதும் பெட்டிக்குள் இருந்து எடுத்துட்டு ஓடிட்டான். அவனைப் பிடிக்க முடியுமா அப்படியே ஒழிஞ்சிபோ அப்படின்னு திட்டிட்டேன் என்றாள்.

போலீஸ்காரார் அப்படியே நிலைகுலைந்து போய்விட்டார் அந்தப் பையன் கையில பாதித்திண்ண ஐஸ்கிரீம் அவர் மனசத் திடப்படுத்திட்டு, அந்தப் பொண்ணுகிட்ட சொல்றாரு. அந்த ஓவர் பிரிட்ஜி கிட்ட ஒரு பையன் லாரில அடிபட்டு செத்து கிடக்கான். உன் பிள்ளையா பாருன்னு? சொல்லி முடிக்கிறார் காவலாளி. காலன் அனுப்பிய செய்தி சென்று சேர்ந்தது.

**தாய்மையின் கதறல்**

ஐயோ ராசானு சொல்லிகிட்டே, அந்தப் பால் குடித்த குழந்தையை மார்போடு அணைத்துக் கொண்டு வீடே அதிரும் படி, தெருவே அதிரும் படி ஓடுகின்றாள். இன்னும் இரண்டு தெரு இருக்கே, இன்னும் ஒரு தெரு இருக்கே. கதறிக்கிட்டே ஓடுறா தன்னுடைய ஆடை விலகியதும் தெரியாமல் அந்தத் தாய்மை உணர்வோடு ஓடுறா. இருக்கிற எல்லாரும் அவள் தாய்மை உணர்வைப் பார்த்து அவள் அழுகுரலைக் கேட்டு ஒரு கும்பல் தொடருது. கும்பலுக்கு எல்லாம் ஒரு வேடிக்கை தானே. ஓடி வந்தவள் சிலையாக நிற்கிறாள். கண்ணுல தண்ணி வருது. ஆனா ஒரு சிரிப்பு. கையில் இருக்கிற குழந்தையை அணைத்து, இது நம்ப ராசா இல்லடி. அது வேற யாரோ என்று உணர்வடைந்து தெய்வத்திற்கு நன்றி சொன்னாள். தன் குழந்தை இல்லை என்றதும் இறந்த குழந்தையைப் பற்றிய கவலை நீங்கியது. என்ன நடக்குமோ இந்தத் தாய் எப்படி அந்த இழப்பை ஏற்றுக் கொள்ளப் போகிறாளோ எனத் தவித்துக் கொண்டிருந்த காவலருக்கு இவ்வளவு தான் தாய்மை உணர்வா என்றானது.

**தாய்மை அடையாத தாய்மையின் உணர்வு**

மற்றொரு தாய் கதறி அழுதுக் கொண்டிருந்தாள். கும்பலே அவளை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தது. இவள் தான் தாயோ எனக் கூட்டத்தை விலக்கி பார்த்தார். கையில் இருந்த காய்கறிக் கூடை சிதறிய நிலையில் காவலாளியின் மனைவி இருபது வருசமா தவமா தவமிருந்தும் “வரமா வரம் கேட்டும் குடுக்காத அந்தக் கண்ணவிஞ்ச தெய்வம் இப்படி அநியாயமா ஒரு வைரப் பொதையல வாரி எறச்சு இருக்கு!” கதறினாள்.

வீட்டுக்குப் போலாம்னு இழுத்த கணவனிடம் அடப்பாவி ஒரு குழந்தையைப் பெத்து கொஞ்சத்தான் பாக்கியம் இல்ல இறந்த குழந்தையைத் தொட்டு அழக்கூட எனக்கு உரிமை இல்லையா எனக் கதறினாள்.

மனைவியை அவனால் இழுத்துச் செல்ல முடியவில்லை. உடல் பாரம் மட்டுமா கனத்தது? அவள் தன் இதயத்தில் தாங்கிக் கொண்டிருக்கும் உலகத்தின் சுமை – தாய்மையின் சோகம். இந்தச் சுமையை அவனால் தாங்க முடியவில்லை.

குழந்தை இல்லாத ஒருதாயின் அழுகையும், தன் குழந்தை இறந்ததோ எனத் தவித்த தாயின் தவிப்பும் பார்ப்போருக்கு வேடிக்கையாக இருந்தது.

**என் கருத்து**

மனிதர்களுக்குச் சாவுவருவது விதிதான் ஆனால், அதைப் பார்த்து மற்றவர் அழுகிற இந்த வேதனை இருக்கே அது கொடுமையானது. கொஞ்சம் நேரம் சந்தோசமா இருந்த அந்தக் குழந்தை இப்போ இல்லை. ஆசையா ஐஸ்கிரீம் வாங்கி சிட்டுக்குருவி போல் பறந்து துள்ளிக் குதித்த குழந்தை இல்லை. ஐஸ்கிரீம் கரைவதற்குள் அந்தக் குழந்தை இறந்துவிட்டது.

கொஞ்ச நாளைக்கு முன்னாடி ரோட்ல ஒரு விபத்து நடந்தது. ஓர் அம்மா ஸ்கூட்டில முன்னாடி தன் குழந்தையை உட்கார வைத்து ஓட்டும்போது, அந்தப் பொண்ணு கீழே விழுந்து விபத்து ஏற்பட்டது. இதை எல்லோரும் வாட்ஸ்அப் ஸ்டேட்டஸ் வைக்கிறாங்க. இத ஸ்டேட்டஸ் வைக்க என்ன இருக்கு? அடுத்தவர்களுக்கு நடக்கிறது ஒரு பொழுது போக்கா தெரிகிறது.

இக்கதையில் அந்தப் பையன் உயிர் போகும் போது அந்த ஐஸ்கிரீம் சாப்பிட முடியலயே என்ற ஏமாற்றம் தான் இருந்திருக்கும். உயிரோட இருக்கும்போது எவ்வளவுதான் கிடைத்தாலும் சாகும் போது அது ஏமாற்றமா தான் இருக்கும்.

நாம் நாளைக்கு சாகப் போறோம்னு தெரிஞ்சா கடவுள் கிட்ட நான் சம்பாதிக்க அனுபவிக்க இன்னும் நெறைய இருக்கு. இன்னும் ஒரு நாள் மட்டும் நேரம் குடுனு கேக்கலாம். அந்த ஒருநாள் யாருக்கும் கிடைக்கப் போவதில்லை. இருக்குற வரைக்கும் மற்றவர்களுக்கு

உதவியாக வாழனும் இல்லை. அவர்கள் கஷ்டப்படும் வேளையில் ஆறுதலாக இருக்கனும். அதை விட பெரிய உதவி வேறு ஒன்றும் இல்லை. மற்றவர்களுக்கு துன்பம் நேரும்போது எனக்கு என்ன என்று இல்லாமல். அவங்கச் சுமையைத் தாங்கி நில்லுங்க.

**முடிவுரை**

இந்தக் கதையில் இரண்டு கதாப்பாத்திரங்களைக் கொண்டு வருகிறார் ஜெயகாந்தன். இறந்தது தன் குழந்தை இல்லனு சந்தோஷப்படுகிறார் ஒரு தாய். இறந்தது தன்னுடைய குழந்தை இல்லை அப்படின்னு தெரிஞ்சும் வலிய ஏத்துக்குறாங்க குழந்தையே இல்லாத மற்றொரு தாய்.

ஒரு தாயிடம் அவள் பிள்ளையின் இறப்பைச் சொல்ல தவிக்கும் தாயின் தவிப்பை உணர்ந்த காலனின் மனநிலையையும் ஆசிரியர் விளங்கவைக்கிறார். அதன் பிறகு அவனுக்கும் சம்பந்தமில்லை என அனைத்துப் பெண்களிடம் வெளிப்படையாக அவர் கேட்டிருக்கலாம் ஆனால் அவர் அப்படி செய்யாமல் ஒவ்வொரு பெண்ணின் மனதையும் அறிந்து பேசுகிறார்.

ஒரு தாயின் பார்வையில் உயிரின் மதிப்பு உயர்ந்திருக்கிறது. ஊரில் உள்ள மக்களுக்கு மற்றவரின் உயிரின் மதிப்பு வேடிக்கையாகத்தான் இருக்கிறது. வேடிக்கைப் பார்ப்பவர்கள் நம் வீட்டில் இப்படி நடந்து இருந்தால் எப்படி இருக்கும் என்பதை யோசிக்காமல் மற்றவரின் துயரத்தை வேடிக்கைப் பொருளாகவே பார்க்கின்றார்கள் என்பதைக் கதை ஆசிரியர் விளக்கியுள்ளார்.

தாய் என்பவள் எல்லா சூழலிலும் சுமை தாங்கியாவே இருக்கிறாள். நமது தாயும் கூட அவர்கள் சுமைகளைத் தாங்க வில்லை என்றால் நாம் இலகுவாக வாழ முடியாது. என்பதும் உணரத்தக்கதாகும்.

ஆய்வுக் கட்டுரை – மூன்று

# வெளிப்பூச்சு – ஓர் ஆய்வு

க. சங்கீதா

இளங்கலைத்தமிழ் மூன்றாமாண்டு

**முன்னுரை**

புதுமைப்பித்தன் எழுதிய கதைகளில் வெளிப்பூச்சு என்ற கதையை ஆய்விற்காக எடுத்துள்ளேன். வெளிப்பூச்சுக் கதையை எழுதிய புதுமைப்பித்தன் கடலூர் மாவட்டத்தில் உள்ள திருப்பாதிரிப் புலியூரில் 25 ஏப்ரல் 1906ஆம் ஆண்டு பிறந்தார். தொடக்கக் கல்வியைச் செஞ்சி, திண்டிவனம், கள்ளக்குறிச்சி ஆகிய இடங்களில் பயின்றார்.

உண்மை சம்பவங்களை ஒத்தது போன்ற கதைகளை எழுதுவதில் வல்லவர் என்பது அவரது கதைகளைப் படிக்கையில் புரிந்துக் கொள்ளலாம். வெளிப்பூச்சு என்ற கதையில் ஒரு குடும்பத்தைக் கையாளும் ஆடவனின் நிலையைத் தத்ரூபமாகக் கூறியுள்ளதைக் காணலாம்.

**கதாப்பத்திரங்கள்**

ரங்கனாதன்

ராதை

ராகவன்

**ரங்கநாதன்**

ரங்கனாதன் குடும்பத் தலைவன். ராதாவிற்குப் பொறுப்பான கணவன். தன் குடும்பம் வறுமையில் இருப்பதை அறிந்தும் ஆபீஸிற்கு வந்து குடும்ப பிரட்சினைகளால் வீட்டிற்கு

போகாமல் இங்கேயே இருக்கலாமா என யோசிக்கும் போது வீட்டுத் தொந்தரவுகளை எல்லாம் ஒரு பெண்ணின் தலையில் போட்டுவிட்டு அங்கேயே ஒளிந்துக் கொள்வது கோழைத்தனம் என்று எண்ணுபவர்.

**ராதை**

ராதை வறுமையிலும் குடும்பத்தை நடத்தும் பக்குவம் நிறைந்தவள். எல்லா சூழலிலும் தன் கணவனுக்குத் துணையாக நின்று இன்பத் துன்பங்களில் பங்கு கொள்கிறாள். கணவன் தான் கடனாக வாங்கி வந்த "எட்டு அணாவை வைத்து பொக்கிஷ மந்திரியாக முடியுமா?" என்று சொல்லி சிரித்தவுடன் அவனது வலிகளை உணர்தவளாய் அவனோடு சேர்ந்து சிரித்து அவன் சோர்வில் பங்கெடுத்துக் கொண்டாள்.

**ராகவன்**

ரங்கனாதனுடன் அலுவலகத்தில் வேலை செய்பவர். கடனாக வாங்கிய எட்டணாவை வாங்கிச் சென்ற புண்ணியவான்.

**சராசரி குடும்பத் தலைவனின் மனநிலை**

இக்கதையில் ரங்கநாதனின் வாழ்க்கையில் இருந்து சராசரி குடும்பத்தலைவனின் மன நிலையை அறிய முடிகிறது.

ரங்கநதானுக்கு அன்று சம்பளம் போடவில்லை மாதமும் கடைசியாகிவிட்டது. வீட்டில் எண்ணூற்றைம்பது செலவு. வீட்டு வாடகை கொடுக்காததால் உரிமையாளர் வாய்க்கு வந்ததை எல்லாம் பேசிவிட்டார். பாத்திரங்களை வெளியில் தூக்கி வீசுவது ஒன்று மட்டும் தான் குறை.

இரவு வீட்டில் அரிசி இல்லை. சாப்பாட்டு இல்லாத கவலை அவனுக்குப் பாதகமில்லை. குடும்ப நிலையை வெளியில் சொல்ல முடியாமல் அல்லது தன் வறுமையால் மற்றவர்களிடம் படும் அவமானத்தால் ஏற்படும் மனக்கவலைகள் அவன் உயிரையே வாட்டி விடுகின்றது.

வீட்டிற்குப் போவதற்குக் கூட மனமில்லை கையில் பணம் இல்லாத கஷ்டம் ஏற்பட்டுவிட்டால் சந்நியாச உலகம் மோட்ச சாம்ராஸ்யமாகத் தோன்றுமாம். ரங்கநாதனின் நிற்கும் வாழ்க்கையை விட எவ்வளவோ மேலானதாகப்பட்டது.

**எட்டணா**

ரங்கநாதனுக்குச் சம்பளம் போடாத நிலையில், வீட்டின் வறுமையைப் போக்க வீட்டின் உரிமையாளரின் வாயை அடைக்க, இரவு உணவு சமைக்க, தேவையான அரிசி, எண்ணெய் வாங்க என அனைத்திற்கும் சேர்த்து அவன் கண்டறிந்த தீர்வு கடன் வாங்குவது. அந்தப் பணம் போதுமானதாக இருக்காது என்றாலும் இத்தனைச் செலவுகளையும் தீர்க்க ரங்கநாதன் “எட்டணாவுடன்” வீட்டிற்கு வந்தான்.

கடும் புயல் வீசி, கொடிய இடி மின்னல் மின்னி, ராட்சத மழை பொழியும் போதும் அப்போது வரும் மண் வாசனையை ரசிக்கும் குழந்தைப் போன்று இருந்தது இச்சூழல். அந்த எட்டணாவை வைத்து நாளைய பொழுதைப் பார்த்துக் கொள்ளலாம் என்று இருந்தனர்.

வீட்டிற்கு வந்த நண்பர் ராகவன் கிளம்பும் போது எட்டணா தேவைப்படுகிறது என உதவி கேட்டார். ரங்கநாதன் இருக்கும் நிலையில் அவர் பணத்தைக் கொடுத்தால் குடும்ப நிலை என்னவாகும் நாளைய பொழுதைக் கழிக்க அவர் தீட்டிய திட்டங்கள் அத்தனையும் வீணாகும். பணத்தைக் கொடுக்கக் கூடாது என்றே எண்ணினார். கேட்காதவர் வாய் திறந்து கேட்டுவிட்டார் என யோசித்தார். வீட்டு முதலாளியின் முகம், வீட்டின் நிலைமை கண்முன்

வந்து போனது. எட்டணாவை நண்பரிடம் கொடுத்து விட்டு திரும்பினார். எட்டணா கை மாறியது.

கஷ்டத்தில் அழுது கொட்டிருந்தவனுக்கு, கவலை தீர்க்க கடவுள் வரவில்லை என்றாலும் கண்ணைத் துடைக்கவாவது கைக்குட்டையைப் போல எட்டணா ரங்கநாதனுக்கு வந்தது. அதுவும் இல்லை என்றானது.

சமையல் செய்ய எண்ணெய் இல்லை வாங்கி வாருங்கள் என்று கூறியதும், எட்டணாவை நண்பர் கேட்டதாகவும் தான் கொடுத்துவிட்டதாகவும் அதற்கு மேல் முழுமையாக விலக்க முடியாதவராய் “எட்டணாவைக் கொடுத்து விட்டேன். காலை தோசை இருக்கிறதோ இல்லையோ அதுவே போதும்” என்று தன் மனைவி அடுத்த கேள்வி கேட்க இடமின்றி பேசினார். அவளுக்கும் புரிந்தது நண்பரிடம் குடும்பச் சூழலைக் கூறி இல்லை எனக் கூறமுடியால் கொடுத்துவிட்டு, தான் படும் தவிப்பை நன்கு உணர்ந்தாள்.

**வெளிப்பூச்சு வெளிப்படும் விதம்**

நான் அறிந்தவரை வெளிப்பூச்சு என்பது ஒரு பொருள். உள்ளே ரனமான நிலையில் இருந்தாலும் வெளியில் அழகான ஒப்பனையோடு காண்பிப்பதைப் போன்றதாகும். அதனைப் போன்று உள் ரணத்தை மறைத்து வெளிப்பூச்சான வாழ்க்கையை ரங்கநாதன் வாழ்வதாகப் புதுமைப்பித்தன் வெளிப்படுத்தியுள்ளார். இன்றும் நம்மில் பல பேர் வெளிப்பூச்சான வாழ்க்கையையே வாழ்ந்து வருகிறோம்.

எட்டணாவைக் கடனாகப் பெற்று வந்தவன், அந்தப் பணம் போதுமானது இல்லை என்று அறிந்தும் தன் இயலாமையைக் கவலையை மீறி சிரித்த இடத்தில் வெளிப்பூச்சு வெளிப்படுகிறது.

நண்பரிடம் பணத்தைக் கொடுக்கும் போது, தான் வறுமையில் இருப்பதை மறைத்து கொடுக்கிறார். இந்தச் சூழலில் வெளிப்பூச்சு வெளிப்படுகிறது. இதுவரை இவர்

இப்படிப்பட்ட வறுமையில் வாழ்கிறார் என்பதை வெளியில் உள்ளவர்களுக்கு வெளிப்படுத்தாமல் ஊர் ஒப்ப மரியாதையுடன் வாழ்ந்ததாலே எட்டணாவைக் கொடுக்க நேர்ந்தது.

சமைக்க எண்ணெய் வேண்டும் எனக் கேட்ட மனைவியிடம் உள்ளுக்குள் தன் இயலாமையை மறைத்து அதிகாரத் தொனியில் பதிலலித்து, சூழலைச் சமாளிக்கிறார். இங்கும் அவரது மனநிலையைத் தன் மனைவியிடமும் வெளிக்காட்டது மறைப்பது வெளிப்பூச்சாக அமைகிறது.

குடும்பத்தை முன்னேற்ற நினைக்கும் ஆண்கள் குடும்பத்திற்காகக் கவலைகளை வெளியில் சொல்லவும் முடியாமல் தீர்க்க வழியும் தெரியாமல் போராடுகின்றனர். வறுமையிலும் குடும்பத்தின் தன்மானம் காக்கும் போராட்டத்தில் பெரும்பாலும் தொய்ந்து நொறுங்குவது ஆடவரின் மனமே...இங்கு வெளிப்பூச்சாக வாழ்பவனும் அவனே என்பதை இக்கதை உணர்த்துகிறது.

**ஆய்வுக் கட்டுரை – நான்கு**

# ஏன் இந்த வேகம் – ஓர் ஆய்வு

**ரா. கவிதா**

**இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு**

**முன்னுரை**

எழுத்தாளர் லஷ்மி தமிழகத்தில் குறிப்பிடத்தக்க பெண் எழுத்தாளர். சமூகச் சிறுகதைகள் மற்றும் புதினங்கள் பெருமளவு எழுதியவர். இவர் எழுதிய ஏன் இந்த வேகம்? என்ற கதையை ஆய்வு செய்துள்ளேன். இக்கதையின் மூலம் தெரிந்துக் கொண்ட செய்திகளை உங்கள் முன் வைக்கிறேன்.

தாரணி எனும் கதாப்பாத்திரத்தை மையமாக வைத்தே இக்கதை அமைந்துள்ளது. தாரணியின் குடும்பத்தில் அப்பா, அம்மா, அண்ணன்கள், தங்கை ஆகியோர் உள்ளனர். தாரணி இருதய நோயாள் பாதிப்படைந்தவள். பள்ளிக்கூடத்தில் டைப்பிஸ்டராகப் பணியாற்றி வருகிறாள். ஆங்கிலத்தை அதிகம் விரும்புபவள். தாரணி அவமானத்தைச் சந்தித்து அடிமைப்படுத்தப்பட்டு குடும்பத்தினராலும் மற்றவர்களாலும் பல துன்பங்களை அனுபவித்தாள். தாரணியின் வாழ்க்கையின் மூலம் சமூகம் சிந்திக்க வேண்டிய கருத்துகளைக் காண்போம்.

**தாரணியின் நிலை**

தாரணியின் மனப்போராட்டத்தில் நேர்ந்த சிறு பிழையால் அவளது வாழ்வு நிலை குலைந்தது. வேலைக்குச் சென்று சுய சம்பாத்தியத்தில் வாழ்ந்தவள் வீட்டில் கைதியாய் அடிமையானாள். குடும்பத்தினரின் துணிகளைத் துவைத்து வீட்டைப் பெருக்கித் துடைத்து அனைத்து வேலைகளையும் செய்தாள். கனமான வாளியைத் தூக்கியதாலோ என்னவோ நெஞ்சுவலி அதிகமாகிவிட்டது. மருத்துவர் தந்த மாத்திரையைப் போட்டாள். தாகத்துடன்

இருந்ததால் தாகம் அடங்கும் வரை தண்ணீர் குடித்தாள். வெயிலுக்குச் சில்லென்ற தண்ணீர் குடிப்பது சுகமாக இருந்தது. “ஒரு நொடி பொழுது சுகம்” அதை அனுபவிக்க இயலவில்லை. தாரணியை அவளது அண்ணி எட்டு ஊருக்குக் கேட்கும் படி அதட்டி வேலை வாங்கினாள். துணிந்து பேசும் தைரியம் இல்லை. உள்ளுக்குள்ளே உடைந்து போனாள்.

**தாரணியின் இயலாமை**

தாரணி செய்த தவறுக்காக “வீடே கூடி தானே சாவு வருமுன் மரண தண்டனை” கொடுத்துக்கொண்டிருந்தனர்.

“அப்பா, அண்ணா என மனசு ஓலமிடுவது கேட்கலையா. நீங்கப் பெத்த மகள் தானே. அண்ணா உன்னுடைய ரத்தத்தின் ஒரு பகுதி தானே. என் கண்களில் என்னுடைய கஷ்டம் தெரியவில்லையா“ என்ற வரிகள் தாரணியின் உள்ளக் குமுறலையும் இயலாமையையும் எடுத்துரைக்கிறது. ஒரு பெண்ணைச் சற்றும் புரிந்துக் கொள்ளாமல் ஊருக்காகக் கொடுமைப்படுத்தினர்.

சன்னல் அருகே பாடல் கேட்டது. வெளியில் குருவிகள் சிறகடித்துச் சந்தோஷமாக அருகில் உள்ள போகன் வில்லா மரத்தில் அமர்ந்திருந்தன. இதனைப் பார்த்த தாரணி குருவிக்கும் போகன் வில்லாவிற்கும் இந்த உலகில் வாழ உரிமை உண்டு எனக்கான உரிமையை மட்டும் இறைவன் விரைவாகப் பறித்துவிட்டான் என்று தன் இறப்பு குறித்து வருந்தினாள். தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளவும் இயலாத தன் சூழலை எண்ணி கண்ணீர் வடித்தாள்.

**சமூகத்தினால் நேர்ந்த அவலம்**

அம்மாவின் துணைக்கொண்டு இருதய நோய்க்கான சிகிச்சையைப் பற்றி டாக்டரைப் பார்க்க சென்னைக்குச் சென்றிருந்தாள். அதனை இந்தச் சமூகம் தவறாகச் சித்திரித்துவிட்டது. ஒரு தெருவில் ஆரம்பித்து ஒரு ஊர் முழுக்க தாரணி தன் மூன்று மாதக் கருவைக்கலைக்க

சென்னைச் சென்று இருக்கிறாள் என்று கூறினர். தன் தாயுடன் தான் வெளியூர் சென்றால், தவறேதும் நடக்கவில்லை என்றாலும் உண்மையை ஊருக்குச் சொல்ல வழியில்லை.

ஓர் இளம் பெண் மனம் அத்தகைய வார்த்தைகளைக் கேட்டு நொறுங்கிப் போவதைவிட கொடுமையானது வேறெதுவும் இல்லை.

வீட்டில் தாரணியைத் தவறான வார்த்தைகளை வைத்து திட்டுவது, செத்து ஒழிஞ்சு போ எனச் சபிப்பதும், மகளென்றும் பாராமல் கொடூரமாகக் காயப்படுத்துவதும், ஊர் என்ன சொல்லும் என்ற மனப்பாங்கே காரணம். அவள் மனநிலையை ஆராயாமல் தன் மானமே பெரிதென்று பெண்ணை இழிவுப்படுத்தினர். அத்தனை அடிகளும் குடும்பமும் சமூகமும் தாரணிக்குக் கொடுத்தது.

மருத்துவர் தாரணிக்கு உடனடியாக அறுவை சிகிச்சை செய்தால் மட்டுமே உயிர்வாழ முடியும் என்று கூறியிருந்தார். அதனை வீட்டில் இருப்போருக்குச் சொல்லியும் யாரும் காதில் போட்டுக்கொள்ளவில்லை. குடும்பக் கவுரவத்தை குழிதோண்டி புதைத்த பாவி சாகட்டும் என்று அசட்டையாகச் சொன்னார்கள். உயிர் போகும் நிலையிலும் தாரணியைக் காக்க யாருக்கும் மனதில்லை.

தலை நிமிர முடியாதபடி பயங்கரமானதொரு தவறைச் செய்துவிட்டதாக, பாவப்பட்டவள், குடும்பத்தைக் கெடுக்க வந்தவள் எனப் பல பெயர்களால் அவளை அலட்சியமாகக் கூறினார்கள். ஊருக்காகப் பெண்ணை அடிமையாக்கி. அவள் தரப்பு நியாயத்தைக் கேட்காமல், அவளுக்கு அறிவுரை கூறாமல் பெண்ணை இழிவுபடுத்தினார்கள்.

**பெண்ணின் உரிமையற்ற நிலை**

ஆணுக்கொரு நியாயம், பெண்ணுக்கு ஒரு நியாயம். பெண்ணுக்கான உரிமை எங்கும் எதிலும் கிடைப்பது இல்லை. தாரணிக்கு எந்த விதத்திலும், அவளின் குடும்பத்திலும், சமூகத்திலும், நியாயமும் உண்மையும் மறுக்கப்பட்டது.

**தாரணியின் மனநிலை**

அண்ணியின் கேடு கெட்டவன் என்ற சொல் அவளை நிலை குலையச் செய்தது. குடும்பத்தைக் கெடுக்க வந்த கோடாரி காம்பு போன்ற வார்த்தைகள் அவளை மனம் வருந்த வைத்தது. நாலு சுவருக்குள் அவளை சமாதி கட்டிவிட்டு உறவினர்கள் வார்த்தையால் அவளைச் சித்திரவதைச் செய்கிறார்கள்.

இருதய நோயாளி அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்றதுமே தாரணியின் உணர்வுகள் தொய்ந்து போயின. டாக்டரின் தீர்ப்பில் உற்சாகம் ஒடுங்கி உணர்வுகள் தொய்ந்து மனம் சோர்ந்தவளாக வேலைக்குப் போய் கொண்டிருந்தாள். அந்நிலையில் கேசவனின் மனைவி மல்லிகாவின் சிநேகம் கிட்டியது. கேசவன் தோற்றத்தில் மட்டும் வசீகரமானவன் அல்ல. மனதைக் கவரும் வகையில் பேசுமளவு கெட்டிக்காரன் என்பதைச் சில தினங்களிலேயே புரிந்துக்கொண்டாள். கேசவன் ஆங்கில மொழியைச் சரளமாக ஆழமாகப் பேசினான். கவிதை கூட புனைந்தான். தான் எழுதிய கவிதைகளைப் படித்துக்காட்டினான். அவளுக்கும் கவிதை எழுதச் சொல்லிக்கொடுக்க ஆரம்பித்தான். முதலில் அவன் பேசிய ஆங்கிலத்தைக் கண்டு பிரமித்து மயங்கினாள்.

திருமணமான ஆணைக் காதலிப்பது தவறு என மனசாட்சி சாடியது. சாகப்போகிறவள் தானே இந்தக் காதல் நினைவுகளோடாவது இறப்போம் எனத் தன்னைத் தானே சமாதானம் செய்துக்கொண்டாள்.

தாரணியின் பார்வையில் காதல் என்பது தெய்வீகமான உணர்வு. கேசவனுக்கு அப்படியல்ல. கேசவன் ஒரு கவிஞன் அல்ல. பெண்களை ஏமாற்றும் கயவன் என்பதைச் சில நாட்களில் புரிந்துக் கொண்டாள்.

ஆண்கள் தவறு செய்தாலும் அவர்களை வெளியில் தவறாகக் குறிப்பிடமாட்டார்கள். பெண்களை மட்டும் தட்டி பேசுவதும், மக்களிடம் இருந்து ஒதுக்குவது போன்ற செயல்களைச் செய்து அடிமைப்படுத்துவார்கள். தாரணியின் இந்த நிலைமைக்கு முழுமுதல் காரணம் கேசவன் தான். அவளது மனக்கவலையைத் தனக்குச் சாதகமாக்கி அக்கரையாகப் பேசுவது போல அவளது வாழ்க்கையை அழித்து விட்டான். கேவசனுக்கு எந்தத் தண்டைனையும் வழங்கப்படவில்லை. அவன் எப்போதும் போல சுதந்திரமாகசட சுற்றித்திரிந்தான். யாரும்

அவனைக் கேவலமான வார்த்தைகளால் பேசவில்லை. அத்தனை பழி பாவங்களையும் ஏற்றுக்கொண்ட சொரூபமாக தாரணியே நிற்கிறாள்.

தவறிழைத்த ஆணுக்குத் தண்டனை மறுக்கப்படுகிறது. பெண் மட்டுமே அத்தனை தவறுகளுக்கும் பொறுப்பாகிறாள். இன்றளவும் இதே நிலை தான்.

**காலனை வென்ற தாரணி**

தாரணி பணிபுரியும் பள்ளியின் தலைவி செல்லம்மாள் தாரணியிடம் நீ வீணாகக் காலதாமதம் செய்து கொள்ள வேண்டாம். உடனே நீ சென்னைக்குப் போவது நலம். அறுவை சிகிச்சையால் உன்னைக் குணப்படுத்திவிட முடியும். வாழ்க்கை வாழ்வதற்குத்தான் சாவதற்கல்ல. உனக்கு எங்கள் பள்ளியின் மூலம் அறுவை சிகிச்சைக்கு ஏற்பாடுகள் செய்ய திட்டமிட்டிருக்கிறோம் என்றாள்.

தவறு செய்தவர்களைத் திருத்தியமைத்து அவர்களுக்கு மறுவாழ்வு கொடுக்க வேண்டியது சமூகத்தில் உள்ள ஒவ்வொரு நபரின் கடமையாகும். தாரணி நீ அதற்குப் பின்னர் ஆரோக்கியமாக மற்ற பெண்களைப் போல் திருமணம் செய்து கொண்டு தாய்மை ஏற்று நீண்ட காலம் வாழ முடியமாம் என்று நம்பிக்கை வார்த்தைகளைத் தாரணிக்குக் கூறினார்.

நான் வாழ வேண்டியது அவசியமா? என எண்ணிய தாரணிக்கு, தலைவி செல்லம்மாள் அறிவுரை வாழ்க்கை வாழ்வதற்குத்தான் சாவதற்கல்ல என்பதை உணர்த்தினாள். தாரணி துக்கம் தாங்க முடியாமல் அழுதாள். செல்லம்மாள் அவளிடம் நீ அழிந்து போனவள் இல்லை. இளமையின் உற்சாகத்தில் ஒரு தவறு செய்துவிட்டாய். அது உனக்கு ஒரு விபத்து மட்டுமே என்று கூறி தன் மார்போடு அனைத்துக் கொண்டு ஆறுதல் கூறினாள்.

அவர்களின் வார்த்தை தாரணிக்குச் சொல்ல முடியாத அளவில் தெம்பைக் கொடுத்தது. யாரும் ஆறுதல் கூறாத நிலையில் தலைவி தாரணிக்குப் பெரும் ஆதரவை அளித்தார்கள். தாரணிக்கு இனி சமூகத்தின் மேல் பயமில்லை. தாரணிக்கு யாரும் முதலில் இருந்து ஆறுதல் சொல்லவும் அவளை ஆதரிக்கவும் யாரும் இல்லாததால் அவளின் மனநிலை தவறியது. மீள முயலும் போது சூழ்ச்சிக்காரக் கேசவனால் வீழ்ந்தாள். மீண்டும் செல்லம்மாவாள் எழுச்சி பெற்றாள்.

காலா! உனை நான் சிறு புல்லென மதிக்கிறேன் என்றன்
காலருகே வாடா! சற்றே உன்னை மிதிக்கிறேன்
வேலாயுதா விருதினை மனதிற் பதிக்கிறேன் நல்ல
வேதாந்த முரைத்த ஞானியர் தமை யெண்ணி துதிக்கிறேன்.

என்ற பாரதியின் கவிதை வரிகளை வாசித்து வாசித்து நோயினால் தன் உயிரைப் பறிக்க காத்துக் கொண்டிருந்த காலனையும் வார்த்தைகளால் காயப்படுத்திய சமூகமாகிய காலனையும் காலில் மிதித்து விட்டாள்.

**முடிவுரை**

தாரணி இனி அவளின் நம்பிக்கையை இழக்கமாட்டாள். சமூகத்தில் பெண்களை அடிமைத்தனப்படுத்தாமல் அவர்களுக்கான பிரச்சினைகளைத் தெரிந்துக் கொண்டு அவர்களை ஆதரித்து, பெண்களைப் புரிந்துக்கொள்ள வேண்டும். முழு தவறையும் பெண்ணிடம் சாய்த்து ஆண் சாமர்த்தியமாய் சாதனை செய்தது போல் தலை நிமிர்ந்து சமூகத்தில் உலா வரும் நிலை மாற வேண்டும். பெண்களுக்கான சுதந்திரமும் நியாயமும் சமூதாயத்தில் கிடைக்க வேண்டும்.

**ஆய்வுக் கட்டுரை - ஐந்து**

# நேற்றைய மனிதமும் இன்றைய மனமும்

**ஜெ. ஜெகதீஸ்வரி**

**இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு**

**முன்னுரை**

20ஆம் நூற்றாண்டு எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்கவர் பிரபஞ்சன். இவரின் இயற்பெயர் வைத்தியலிங்கம். புதுச்சேரியைச் சேர்ந்தவர், தன் எழுத்துகளால் பல விருதுகளைத் தனக்குச் சொந்தமாக்கியவர். இவர் இயற்றிய பல படைப்புகளில் **நேற்று மனிதர்கள்** என்னும் சிறுகதைவாயிலாக ஆசிரியர் நமக்குக் கூற விரும்பும் கருத்துகளைக் இக்கட்டுரையின் வாயிலாகக் காண்போம்.

**கதாப்பாத்திரங்கள்**

கோட்டை வீட்டுமாமா

மூர்த்தி

சுமதி - கோட்டைவீட்டு மாமாவின் மகள்

குப்புசாமி - வேலைக்காரன்

தலையாரி - வேலைக்காரன்

தனபாலு - கோட்டை வீட்டுமாமாவின் மகன்

இந்தக் கதாப்பாத்திரங்களைக் கொண்டு கதை அமைந்துள்ளது.

**கோட்டை வீட்டு மாமா**

கோட்டை வீட்டு மாமா மூர்க்கத்தனம், ஆணவம், தான் என்ற கர்வம், சாதி வெறி கொண்டவர். மேலும், மனிதர்களிடம் ஏற்றத்தாழ்வு பார்ப்பவராகவும், கொடிய குணம் கொண்டவராகவும் இருந்தார்.

**மூர்த்தி**

நற்குணங்கள் கொண்டவன், முற்போக்குச் சிந்தனையாளன், பகுத்தறிவுக் கொண்டவன் சாதி, மதம் பேதங்களற்றவன். நன்கு படித்து கல்வியறிவு பெற்றவனாகவும் இருந்தான் மூர்த்தி.

**சுமதி**

கோட்டை வீட்டு மாமாவின் மகள். முயல் போன்றவள். குப்புசாமி என்பவனைக் காதலித்ததால் தன் உயிரைப் பறிக்கொடுத்தாள்.

**கோட்டை வீட்டு மாமாவின் தோற்றம்**

கைக்கு அடங்காத கொத்துமீசை, ரங்கூன் தேக்கு மாதிரி பளபளப்பான மார்பு, கடைசல் பண்ணியது போன்ற உருண்டை உருண்டையானக் கைகளும் தோள்களும் உடையவர். கம்பீரமான உடல் கட்டுடன் ஊரையே வலம் வருபவர் மாமா.

**கோட்டை வீட்டு மாமாவின் குணநலன்**

**கோபம்**

அரசமர இலைகள் மழையினால் கழுவிவிடப்பட்டு குழந்தை மாதிரி பஞ்சாயத்து விளக்கொளியில் பளபளத்தன. “மழை கறைகளைக் கழுவி விடுமா என்ன? அப்படியெனில் மாமாவின் மூர்க்கத்தை அது கழுவி விடுமா?” என்று ஆசிரியர் கூறுவதன் மூலம் மூர்க்க குணம் என்பது மனிதனுடைய வாழ்வில் கறையாக உள்ளது. மூர்க்கத்தின் மறு உருதான் கோட்டை வீட்டு மாமா.

ஒரு நாள் இவரின் மனைவி மாட்டுகாரன் பையனிடம் ஏதோ சிரிச்சி பேசி கஞ்சி ஊற்றினாள். அதைப் பார்த்து விட்டு அவர்களிடம் விசாரிக்காமாலே சந்தேகம் அடைந்து கோபத்துடன் அவர் பார்த்த பார்வையே அவர்கள் இருவரையும் வாழ்நாள் முழுவதும் பிரித்து விட்டது. மாமாவின் மனைவி இறந்தபோதும் கடைசியாக அவளின் முகத்தைப் பார்க்கக் கூடவரவில்லை. அவ்வளவு மூர்க்க குணம் கொண்டவர்.

ஒரு மனிதன் கறைபட்ட குணமான மூர்க்கத்துடன் வாழ்ந்தால் அவன் வாழ்வே அழிந்துவிடும். கோபத்துடன் நாம் எடுக்கும் முடிவுகள் முட்டாள்தனமானதாகவும் தவறானதாகவுமே இருக்கும். கோபம் மனிதனைக் கொள்ளும்.

**மானம், குலப்பெருமை**

பட்டாமணியார் கோட்டை வீட்டு மாமாவின் அப்பாவைப் பற்றி “நீட மங்களத்து நாயக்கரிடம் கோட்டை வீட்டுமாமாவின் அப்பா பட்டாமணியார் அப்பாவிடம் 100 ரூபாய் கடன் பட்டுதான் மதகடி நிலத்தை வாங்கியதாகவும், அந்தப் பணத்தைப் பைசல் கூட பண்ணாமல் போய் சேந்துட்டான் பாவி என்றும் சொன்னார். அதனால் தன்மானம் கெட்டு வாங்கின தேதியிலிருந்து இன்றை தேதி வரை கணக்கு போட்டு வட்டியும் முதலுமாக 2000 ரூபாயைத் திருப்பிக் கொடுத்தார்.

அவர் கடனைத் திருப்பித் தரும்போது “மானத்துக்குத் தலைவணங்குற வம்சம் மனுஷங்களுக்கில்லை” என்றார். மானத்தோடு வாழ்வது மனிதனுக்கு அவசியமான ஒன்றுதான் இந்த இடத்திலும் சக ஊர் மனிதனைக் குறைவாகக் கூறி தன் வம்சம் மட்டுமே மானத்தைக் காப்பதாகக் குலப்பெருமையைப் பேசுகிறார். இத்தகைய உணர்வு தவறானதே.

மாமாவின் மகள் சுமதி தன் வீட்டில் வேலைப்பார்க்கும் தூரத்து சொந்தக்காரரான குமரேசனைக் காதலித்தார். இதனை அறிந்த மாமா சுமதியையும் குமரேசனையும் கொன்று விட்டார். உயிரைப் பறித்த குற்ற உணர்வு துளியும் இன்றி தன் இனத்திற்கு மானக்கேடு

நிகழாமல் காத்ததாக மெச்சிக்கொண்டார். தன்மானம் உடையவனாக மனிதன் இருப்பது அவசியம். குல மானம் காக்க மனம் இல்லாதவனாக இருக்கக் கூடாது.

**மாமாவின் சாதி வெறி**

கோட்டை வீட்டு மாமா சாதி வெறி கொண்டவராக இருந்தார். மாமாவின் மூர்க்கச் செயலால் அவரை விட்டு பிரிந்த மூர்த்தியும் வெகுநாட்கள் கழித்து மாமாவைக் காண அவரின் வீட்டிற்கு வந்தியிருந்தார். மீசை எலிவால் போல் சிறுத்திருந்தது. பளபளப்பான மார்பும் கடைசல் பண்ணியது. தீ எரிந்த வீடு மாதிரி கரிபடர்ந்து போன முகம் வீடு சரியுமுன்னே அவர் சரிந்துவிட்டிருந்தார் வீட்டின் ஒரு மூலையில். கவனிப்பாரற்ற தனிமையான இந்த நிலையிலும் மூர்த்தியைப் பார்த்து,

**முகத்துல எங்கடா மீசையைக் காணோம்? நம்ம சாதிக்கு மீசை வேணும்டா** என்று கூறினார்.

**சாதி தான் சமூகம் என்றால்**
**வீசும் காற்றில் விசம் பரவட்டும்**

என்று **அம்பேத்கர்** கூறுவதைப் போன்று இக்கதையில் மாமாவின் எண்ணம் முழுக்க அவர் சுவாசம் முழுக்க சாதி எனும் விடம் பரவிக் கிடந்தது. சாதி எனும் விடம் மாமாவைக் கொன்றுவிடும். அவரோடு சேர்த்து சாதியையும் கொன்று விடுவோம். சாதியச் சிந்தனைகள் நம் சிந்தையில் எழுவது தவறு. அது நம்மைக் கொள்ளும் விடம் என்பதை இளைய தலைமுறையினராகிய நாம் உணர வேண்டும்.

**சாதிகள் இல்லை யடிபாப்பா – குலத்**
**தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்**
**நீதி உயர்ந்த மதி கல்வி – அன்பு**
**நிறைய உடையவர்கள் மேலோர்** என்று பாரதியார் சாதிகள் இல்லை எனத் தன் கவிதை வரிகளால் கூறியுள்ளார்.

குலத்தின் பெயரைச்சொல்லி "நீ உயர்ந்தவன் நீ தாழ்ந்தவன் என்ற வேறுபாடு இருக்கக் கூடாது". எல்லோரும் மனிதர்களே எந்தவித சாதி வேறுபாடும் கிடையாது. நீதி உயர்ந்த அறிவு, கல்வி, அன்பு இதனை உடையவர்களே உயர்ந்தவர்கள் என்று பாரதியார் தன் கவிதை மூலம் எடுத்துரைக்கிறார்.

அது போன்று **அம்பேத்கர் சாதியானது ஒட்டு மொத்த சமூகத்தின் பிரச்சினை** என்றார். சாதிய எண்ணம் அறவே நீங்க வேண்டுமென ஆசிரியர் இதன் வழி விளக்குகிறார்.

**மாமாவின் தற்போதைய நிலை**

உடல் ஒடுங்கி கவனிப்பாரற்று, உணவு வழங்குவதற்கும் யாருமில்லாத நிலையிலிருந்தும், அவருக்கு அந்த மூர்க்கத்தனமும், சாதிய வெறியும் அவரை விட்டு நீங்காமலிருந்தது. அவர் பழைய மாமாவாகவேயிருந்தார். இவரைப் போன்று நாமும் இருந்தால் குடும்ப உறவுகளை இழந்து கவனிப்பார் அற்ற நிலையில் கறைபடிந்த வாழ்க்கையைத் தான் வாழ வேண்டும்.

**முடிவுரை**

நேற்று மனிதர்கள் கதையின் கோட்டை வீட்டு மாமா நேற்றைய மனிதனாக இருந்ததனால் தான் அவர் பழைய மூடநம்பிக்கையிலிருந்து மாறாமல் இருந்தார். வேற்றுமை இல்லாமல் சாதி பேதமற்ற மனநிலை அவருக்குச் சற்றேனும் இல்லை. நாம் அனைவரும் இன்றைய மனிதர்கள். கதையில் உள்ள கோட்டை வீட்டு கதாப்பாத்திரம் போன்று இல்லாமல் பகுத்தறிவு கொண்ட மனிதனாக இருக்க வேண்டும். கல்வியால் மட்டுமே இவ்வேற்றுமையை அகற்றமுடியும். கல்வியறிவு பெற்ற நாமும் மனங்களில் மாற்றத்தை உருவாக்குவோம்.

**என் கவிதை வரிகள்**

சாதி என்னும் அரக்கனே
உலகில் மனிதன் தோன்றும் போது நீ எங்கியிருந்தாய்?
இடைப்பட்ட காலத்தில் தோன்றி ஏன்
அனைவரையும் வாட்டி வதைக்கிறாய்
உன்னால் பறிபோன உயிர்கள் எத்தனை?
உன்னால் ஏற்பட்ட இழப்புகள் எத்தனை?
பூச்செடியின் நடுவே முளைத்தமுள்செடி நீ
விஷம் கலந்த நீராய் சமூகத்தில் நீ பரவியுள்ளாய்
அறியாமையின் ஒளியாய் விளங்குகின்றாய்
மூடநம்பிக்கையின் முழு உருவமாய் விளங்குகிறாய்
சமூகத்தின் நிம்மதியைக் கெடுக்க வந்த ஆயுதமே
எதிர்த்து குரல்  எழுப்புவோரைப் பாவிகளாய்ஆக்கினாய்
தொட்டதற்கெல்லாம் குறை காண்பவனே
தீண்டாமையால் தீணி பெற்று வாழ்பவனே
உன்னைக் கல்வி என்னும் பேராயுதம் கொண்டு
அழிப்போம் ஒற்றுமையால் உன்னை வெல்வோம்!

# நற்றமிழ்க்குடில்
## தமிழால் தழைக்கும் உலகு
### மாணவ இலக்கிய மின்னிதழ்




**தமிழ்த்துறை**

**சோகா தமிழ்ப் பேரவை வெளியீடு**

**சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி**

**சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம், சென்னை 600 099.**

**044-26863177, 9677717455, 9677717456**

**sokatamilavai2023@gmail.com**

**sokaikeda2000@gmail.com**